பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 30 | வியாழக்கிழமை | 14.03.2024 | அதிர்வு 226

## போதைப்பொருள் வியாபாரி வாளால் வெட்டிப் படுகொலை

### கம்பஹாவில் பயங்கரம்

ஐஸ், ஹெரோயின் போதைப்பொருள்களை விற்பனை செய்து வரும் நபர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பயங்கர சம்பவம் 06▶



### வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில்

# கைதானவர்களை விடுவிக்கக் கோரி நெடுங்கேணியில் நாளை போராட்டம்

### அனைவரையும் அணிதிரளுமாறு அறைகூவல்

(கே.வசந்தன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

மகா சிவராத்திரி தினமன்று வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் கைதான 8 பேரையும் விடுவிக்கக் கோரி நாளை வெள்ளிக்கிழமை நெடுங்கேணியில் மாபெரும் போராட்டத்துக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் செல்லத்துரை சசிகுமார் அழைப்பு விடுத்துள்ளார். 07▶

# உண்ணாவிரதக் கைதிகளின் உடல்நிலை மோசமடைய முன் 8 பேரையும் விடுவிக்குக!



### அவர்களை நேற்று சிறையில் பார்வையிட்ட பின்னர் கஜேந்திரன் எம்.பி. இடித்துரைப்பு

(கே.வசந்தன்)

“வெடுக்குநாறிமலை ஆலயத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட 8 பேரில் ஆலயப் பூசகர் உள்ளிட்ட 5 பேர் உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். அவர்களின் உடல்நிலை மோசமடைவதற்கு முன்னர் கைதான 8 பேரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்.”

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்தினார்.

வெடுக்குநாறிமலை ஆலயத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட 8 பேரையும் வவுனியா 06▶

# மொட்டுவின் வேட்பாளர் யார்? விசேட கூட்டத்துக்கு அழைப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறைவேற்றுக் குழுக் அடுத்த இரு வாரங்களுக்குள் நடைபெறவுள்ளது எனத் தெரிய வருகின்றது.

கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், பஸில் ராஜபக்ஷவின் பங்கேற்புடன் 07▶




அரசமைப்பு விவகாரங்கள் நன்கு புரிந்த சட்டத்துறைப் புலமையாளர் ஒருவருடன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தேன்.

சில விடயங்கள் குறித்து தவறான புரிதல் – Myth – இருப்பது பற்றிப் பேச்சுத் திரும்பியது. அப்போது அவர் கூறிய ஒரு விடயம் ஆச்சரியம் தருவதாக அமைந்தது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல் என்பது நீண்ட காலம் இழுபடக்கூடிய பிரச்சினை, அதைச் செய்வது நடைமுறையில் கஷ்டமானது என்ற 06▶

# தமிழரசுக் கட்சியின் கிளைகளை நாட்டுக்கு வெளியே அமைப்பதற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை

## நிலைமையைத் தெளிவுபடுத்துகின்றார் பதில் பொதுச் செயலாளர்



(ந.லோகதயாளன்)

இலங்கைக்கு வெளியே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளைகளை அமைப்பதற்கான எந்த அனுமதியும் இதுவரை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியால் வழங்கப்படவில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளைகளை அமைப்பதற்கான அனுமதி வழங்கும் அதிகாரம் கட்சியின் மத்திய செயற்குழுவிற்கே உண்டு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளைகள் வடக்கு, கிழக்கு மாகாணம் மற்றும் கொழும்பு மாவட்டத்தில் நீண்டகாலமாக செயற்பட்டுவருகின்றன. அதேவேளை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்புரிமை பெற்றவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் புலம்பெயர் நாடுகளில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் செயற்பாடுகளிற்கு ஆதரவாக தனியாகவும் தம்மை நிறுவனமயப்படுத்தியும் அந்நாட்டு சட்ட வரம்புகளைக் கடைப்பிடித்து செயற்பட்டுவருகிறார்கள். அவர்களின் தாயக மக்கள் மீதான அக்கறையை எமது கட்சி என்றும் மதித்து செயற்பட்டுவந்துள்ளது. அவர்கள் பல மக்கள் நலத்திட்டங்களை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கும், இயற்கைப் பேரிடர்களின் போதும், பெருந்தொற்றுக்கு எமது மக்கள் முகம் கொடுத்த போதும் மற்றும் கல்வி, சுகாதாரம், பொருளாதார

மேம்பாடு போன்ற செயற்திட்டங்களிலும் நேரடியாகவும் எமது கட்சி உறுப்பினர்களூடாகவும் பல வருடங்களாகச் செயற்பட்டு வருகிறார்கள். அதற்கு எமது மக்கள் சார்பாக நன்றியுடையவர்களாக உள்ளோம். எமது கட்சியின் கொள்கைகளை ஏற்று இணைந்து செயற்பட விரும்பும் புலம்பெயர் உறவுகளுடன் செயற்பட கட்சி ஆயத்தமாக உள்ளது.

கடந்த சில நாள்களிற்கு முன் ஐக்கிய இராச்சியதில் இலண்டன் நகரில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளை அமைக்கப்பட்டதாக சில பத்திரிகை மற்றும் இணையத்தளங்களிலும், வேறு சிலவற்றில் "இலங்கை தமிழ் அரசுக் கட்சி போரம்" (ITAK FORUM) அமைக்கப்பட்டதாகவும் செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளைகளை அமைப்பதற்கான அனுமதி வழங்கும் அதிகாரம் கட்சியின் மத்திய செயற்குழுவிற்கே உண்டு. இலங்கைக்கு வெளியே எமது கட்சியின் கிளைகளை அமைப்பதற்கான எந்த அனுமதியும் இதுவரை இலங்கை தமிழ் அரசுக் கட்சியால் வழங்கப்படவில்லை. - என்றுள்ளது.



# உணவுப் பொருள்களின் விலைகள் குறைகின்றன

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைந்தமையினால், அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் பொருளாளர் நிஹால் செனவிரத்ன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, கொழும்பு புறக்கோட்டை மொத்த விற்பனைச் சந்தையில் ஒரு கிலோகிராம் சீனி 35 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சீனி கிலோகிராம் ஒன்றின் புதிய விலை 265 ரூபா ஆகும்.

கோதுமை மா கிலோவொன்று 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 175 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், பருப்பு கிலோவொன்று 65 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய. அதன் புதிய விலை 285 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.




# பொருளாதாரம் குறித்த புரிதல் இல்லாமல் வழங்கிய வாக்குறுதிகளால் மக்கள் பாதிப்பு

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

நாட்டின் பொருளாதாரம் பற்றிய உண்மையைப் புரிந்து கொள்ளாமல், அதிகாரத்தைப் பெறுவதற்காக வழங்கிய அரசியல் வாக்குறுதிகளினால் நாட்டு மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அந்தத் தவறைச் செய்யத் தாம் தயாரில்லை என்றும் உண்மைக்கு முகம் கொடுத்து நாட்டுக்கு சாதகமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் பாடுபட வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

யுனைடட் யூத் இளைஞர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த “இளைஞர் எமது எதிர்காலம்” என்ற சிநேகபூர்வ சந்திப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் தப்ரபேன் எண்டர்டைன் மண்டில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக நாம் விரைவாக ஏற்றுமதி பொருளாதாரத்திற்குத் திரும்ப வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவிலான இளைஞர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். அவர்கள் ஜனாதிபதியிடம் நேரடியாகக் கேள்விகளைத் தொடுத்தனர்.

முன்வைக்கப்பட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் சாதகமான பதில்களை வழங்கிய ஜனாதிபதி, இளைஞர்களுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகையைக் குறிக்கும் வகையில், யுனைடட் யூத் அமைப்பின் ஆலோசகர் நியோமல் பெரேரா ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன்றை வழங்கினார்.















# மீன்பிடி துறைக்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஆழ்கடல் கப்பல் விரைவில் அறிமுகம் செய்யப்படும்

## கடல் தொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தகவல்



**“மீன்பிடித் தொழிலுக்கு நவீன தொழில் நுட்பம் மற்றும் நவீன செயற்பாட்டு முறைகளுடன் கூடிய புதிய ஆழ்கடல் கப்பலை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.”**

**- இவ்வாறு கடல் தொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டி சில்வா தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கடல் தொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“மீன்பிடி தொழில்துறையின் வளர்ச்சிக்காக, மீன்களின் தரத்தை பாதுகாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் மீன்பிடி உபகரணங்களின் விலை அதிகரிப்புக் காரணமாக மீனவர்களின் வருமானத்தில் ஓரளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் நிலைமையைத் தணிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மீன்பிடித் தொழிலுக்கு நவீன தொழில்நுட்பம் மற்றும் நவீன இயக்க முறைகள் கொண்ட புதிய ஆழ்கடல் மீன்பிடிக் கப்பலை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிபுணர்கள் அடங்கிய குழு திட்டமிட்டு வருகிறது. அதன் பணிகள் முடிந்ததும், புதிய மீன்பிடிக் கப்பல் தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்படும். மீன்பிடி உள்ளீடுகளை நிர்வகிப்பதன் மூலம் நிலையான மீன்பிடித் தொழிலைப் பேணுவதே இதன் நோக்கமாகும்.

மேலும், உலக உணவு அமைப்பு பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. ஒரு புதிய முகுசீ கப்பல் அறிமுகத்தின் கீழ், உலக உணவு அமைப்பு மற்றும் கால நிலை மாற்றம் மற்றும் மாற்று தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் திட்டத்துடன் இணைந்து, மாறும் காலத்திற்கு ஏற்றவாறு ஒரு புதிய கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், சோலார் தொழில்நுட்பம் கொண்ட இயந்திர படகுகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களுடன் எமது அமைச்சு கலந்துரையாடியுள்ளது.

மேலும், ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் ஆதரவின் கீழ், இந்த நாட்டில் ஆழ்கடல் மீன்பிடி கப்பல்களுக்கு கப்பல் கண்காணிப்பு அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவரை, 2,350 ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்களில் இந்த அமைப்பு நிறுவப்பட்டுள்ளது, அடுத்த ஆண்டு முதல் காலாண்டு இறுதிக்குள், 4200 கப்பல்களிலும் கப்பல் கண்காணிப்பு அமைப்புகள் நிறுவப்படும்.

கப்பல் கண்காணிப்புத் தரவுகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தளங்களை முன்னறிவிப்பதும் தற்போது ஆராய்ச்சி மட்டத்தில் செய்யப்படுகிறது. இது தொடர்பான பகுப்பாய்வு மென்பொருள் தயாரிப்புப் பணிகள் தற்போது முடிக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டு முதல் கப்பல் கண்காணிப்பு அமைப்பு முழுமையாகச் செயல்படும். அதே நேரத்தில் இந்த மீன் தரை முன்கணிப்பு சேவையை சேர்க்க எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், மீன்பிடி சட்டத்தை மறுசீரமைத்து, 1996 ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்த மீன்பிடி சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டத்தை கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதன்போது காலத்துக்கேற்ற மாற்றங்களில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதைக் கூற வேண்டும். சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் கடுமையான சட்டம் இயற்றவும் எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், இராஜதந்திர மட்டத்தில் நாடுகளுக்கிடையிலான கலந்துரையாடல்களை மேற்கொண்டு மீன்பிடித் தொழில் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விரிவான திட்டமொன்றை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன், லொரென்சோ புதா – 4 கப்பல் தொடர்பில் கடல் தொழில் திணைக்களம், கடற்படை மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகிய தரப்புகள் கலந்துரையாடியுள்ளன. சட்ட நடவடிக்கைகள் சீஷெல்ஸ் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. சீஷெல்ஸ் நாட்டில் சட்ட நடவடிக்கைகளை முடித்து மீனவர்களை விரைவில் இலங்கைக்கு அழைத்து வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபர் ஊடாக வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.” – என்றார்.

# யாழ். பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

பாடசாலை திறந்த வெளி அரங்கில் மூன்று நாள்கள் தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மூன்று நாள் நிகழ்வுகளும் பாடசாலை அதிபர் பரமலிங்கம் சந்திரபாகு தலைமையில் இடம்பெறவுள்ளன.

நாளை நடைபெறும் முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கந்தசாமி கண்ணன் கலந்துகொள்கின்றார்.

நாளைமறுதினம் சனிக்கிழமை இடம்பெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் கலந்து கொள்கின்றார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மூன்றாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் கலந்து கொள்கின்றார்.






# இந்திய - இலங்கை மின் விநியோகக் கட்டமைப்பால் இலங்கையை எரிசக்தி ஏற்றுமதி நாடாக்க முடியுமாம்

## இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு





இலங்கையின் மின்சார விநியோக முறையை இந்தியாவின் தேசிய கட்டமைப்புடன் இணைப்பதன் மூலம் இலங்கையை எரிசக்தி ஏற்றுமதி செய்யும் நாடாக மாற்ற முடியும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

நாட்டில் குறைந்த செலவில் எரிசக்தி திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் இந்தியா இந்த நிலையை அடையும் என எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான கூட்டு செயற்குழுவின் முதலாவது கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இது இந்தியாவின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சின் செயலாளர் பூபேந்தர்சிங் பஹ்லா மற்றும் இலங்கையின் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜெயவர்தன ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது, நாட்டின் மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகள் மற்றும் மக்களை மையப்படுத்திய முதலீடுகள் குறித்து இந்தியப் பிரதிநிதிகள் விளக்கியுள்ளனர்.

இந்தியாவின் தேசிய பசுமை ஹைட்ரஜன் செயன்முறை குறித்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளதாக இந்திய – இலங்கை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கூட்டுப் பணிக்குழு வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய எரிசக்தி பயன்பாடு மற்றும் மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் பற்றிய உண்மைகளை இந்திய பிரதிநிதிகளிடம் இலங்கை தரப்பு விளக்கியுள்ளது.

2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் எரிசக்தி தேவைகளில் 70 வீதத்தை பூர்த்தி செய்யும் இலக்கை அடைய இந்திய நிறுவனங்கள் தேவையான முதலீடுகளை செய்யும் என்று இந்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சூரிய சக்தி, காற்றாலை மற்றும் மின்சார அமைப்பு உள்ளிட்ட பல அமைப்புகளுக்கு அதிகபட்ச தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதற்கும் இந்தியத் தரப்பு ஒப்புக்கொண்டுள்ளது.

அதற்காக இந்தியாவின் தேசிய சூரிய சக்தி நிறுவனம், தேசிய காற்றாலை திறன் நிறுவனம் உள்ளிட்ட பல தரப்பினருக்கு பயிற்சி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கருத்தெல்லாம் வெறும் கட்டுக்கதை என்றார் அவர்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு கிட்டும் என்றால் இரண்டு அல்லது மூன்று மாதத்துக்குள் மளமளவென்று காரியங்களை ஒப்பேற்றி முடிக்கலாம் என்றார் அவர்.

பெரிய – நீண்ட – சட்ட மூலங்கள் எல்லாம் தயார் செய்ய வேண்டும் என்பதல்ல. தற்போது நிறைவேற்றதிகார ஜனாதிபதியிடம் இருக்கும் அதிகாரம் எல்லாவற்றையும் உத்தேச அரசமைப்புத் திருத்தம் வந்த பின்னர் இருக்கும் ஜனாதிபதியே ஆற்றுவார், ஆனால் அவர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு பெற்ற பிரதமரின் இசைவுடன் தான் அந்த விடயங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற சட்ட வாக்கியத்தைச் சேர்த்துக் கொண்டால் போதுமானது, அந்த அரசமைப்புத் திருத்தத்திற்கு சர்வ ஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெற வேண்டியிருக்கும், எல்லாவற்றையும் இரண்டு, மூன்று மாதங்களில் பூரணமாக முடித்து விட முடியும் என்றார் அவர்.

எனக்கு விளங்கவில்லை என்றேன்.

“நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் அதிகாரங்கள் யாவற்றையும் பிரதமரிடம் ஒப்படைத்தால், அதன்பின்னர் அந்த அதிகாரம் பிரதமரிடம் போய்விடும். அவர் நிறைவேற்றதிகார பிரதமராகி விட மாட்டாரா? ஆகப் பெயர் மாற்றம்தானே நடக்கும்?” என்றேன் நான்.

அவர் சிரித்தார். மேலும் விளங்கப்படுத்தினார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியிடம் அந்த அதிகாரம் இருக்கும்போது அவரை யாரும் பதவியில் இருந்து இலகுவில் அசைக்க முடியாது. குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டு வந்து, குற்றச்சாட்டுகளை நிரூபித்து, அவரைப் பதவியில் இருந்து வெளியேற்றுவது சுலபமான – வாய்ப்பான – விடயமே அல்ல. அத்தோடு அவருக்கு இப்போது அதிக சிறப்புரிமைகள் தனித்துவமாக உள்ளன என்றார்.

ஆனால் பிரதமர் நிறைவேற்றதிகாரத்தை வைத்திருந்தாலும் அவரது நிலைமை அத்தகையது அல்ல. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் ஆதரவை இழந்தால் பிரதமர் பதவியை அவர் இழந்து விடுவார். அந்தப் பிரதமர் நிறைவேற்றதிகாரத்தை வைத்திருந்தாலும் அவரை (இப்போதைய நிறைவேற்றுதிகார ஜனாதிபதியை அவரது சிறப்புரிமைகள் காப்பாற்றுவது போல) காப்பாற்றும் சிறப்புரிமைகள் அதிகம் பிரதமருக்கு இருக்காது என்றார் அவர்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவும், சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் ஆதரவும் பெற முடியும் என்றால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அதைச் செய்ய முடியும். செய்வதற்குப் போதிய வாய்ப்புகளும் காலமும் கூட அவருக்குத் தாராளமாக உண்டு என்றார் அந்தச் சட்ட வாளர்.

அப்படி ஒரு நிலைமை ஏற்படுவதற்குச் சாதகமான சில அம்சங்களையும் அவர் சுட்டிக் காட்டினார்.

1. தேர்தல் மூலம் மீண்டும்தான் ஜனாதிபதியாவதற்கான சூழல் இல்லை என்பது உறுதியானால் இந்த முயற்சியிலேயே ரணில் இறங்குவார்.

2. தங்கள் தரப்பிலும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆளில்லாத நிலையில் அல்லாடும் மொட்டுக் கட்சி, அதனால் இந்தத் திட்டத்தை ஆதரிக்கும்.

3. நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழித்து விட்டு, 2025 ஓகஸ்ட் வரை இந்த நாடாளுமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கி அவர் தலைமையில் அரசைக் கொண்டு நடத்தலாம் என்று மொட்டுக் கட்சி திட்டமிடும்.

4. நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டுமென இந்த நாடாளுமன்றத்திலோ அல்லது முந்திய நாடாளுமன்றத்திலோ யோசனைத் திட்டங்களைக் கொண்டு வந்த ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. போன்றவையும் அத்தகைய திட்டத்தை வெளிப்படையாக எதிர்க்க முடியாது.

5. சுதந்திரக் கட்சி போன்றவை இத்தகைய திட்டத்தை ஏற்கனவே ஆதரிக்கும் போக்கை வெளிப்படுத்தி உள்ளன.

6. மனோ கணேசன், ஹக்கீம், ரிஷாத் போன்றோரின் கட்சிகள் மட்டுமே இத்திட்டத்தை வெளிப்படையாக எதிர்க்கும்.

– இப்படி அவர் இன்னும் பல சாதகமான அம்சங்களை வரிசைப்படுத்தினார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தமக்கு வெற்றிவாய்ப்பு உறுதி இல்லை என்று ஜனாதிபதி ரணிலுக்குத் தோன்றினால் இதுதான் நடக்கும். அதற்கு கால அவகாசமும் வாய்ப்பும் தாராளமாக உண்டு என்றார் அந்த விற்பன்னர்.

அப்படித்தான் பேச்சுக்கள் அடிபடுகின்றன என்றும் அவர் சொன்னார்.

அவரது கருத்தைச் செவிமடுத்த போது எனக்கும் அப்படித்தான் தோன்றியது.

## உண்ணாவிரதக் கைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சிறைச்சாலையில் நேற்று பார்வையிட்ட பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மகா சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் வைத்து பொலிஸாரால் பொய்க் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட 8 பேருக்குமான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. கடந்த காலங்களில் இதே வவுனியா நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்களுக்குக் கட்டுப்பட்டு அந்தத் தீர்ப்புக்களின் பிரகாரம் வழிபாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது ஆலயப் பூசகர், ஆலய நிர்வாகத்தினர், பக்தர்கள் என 8 பேரைப் பொய்க் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பொலிஸார் கைது செய்தனர்.

எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது என்று நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் விரக்தியடைந்த 8 அப்பாவிகளும் சிறைச்சாலையில் பெரும் குழப்பம் அடைந்துள்ளார்கள். அதில் 5 பேர் உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். அவர்கள் நேற்று (நேற்றுமுன்தினம்) காலை முதல் உணவை எடுக்க மறுத்து உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். இதன்காரணமாக என்ன ஆகுமோ என்ற அச்சம் அவர்களது குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ளது. 8 பேருமே எந்தக் குற்றமும் செய்யாத அப்பாவிகள்.

இலங்கை அரசு அதாவது தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம், பொலிஸார் கூட்டிணைந்து சிங்கள பௌத்தமயமாக்கல் திட்டத்தின் கீழ் அந்த இடத்தில் வழிபாட்டில் ஈடுபடுகின்ற தமிழர்களை விரட்டியடித்து அந்த இடத்தைப் பௌத்தமயமாக்க எடுத்த முயற்சி வெற்றியளிக்காத நிலையில் ஆலயப் பூசகரையும், பக்தர்களையும் கைது செய்திருப்பதன் மூலம் எதிர்காலத்தில் அந்தப் பகுதிக்கு யாரும் செல்ல முடியாத அச்சநிலையை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அவர்களைக் கைது செய்த பின்னரே தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம் என்பவற்றிடம் கடிதங்கள் பெறப்பட்டு அப்பாவிகள் குற்றவாளிகளாக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டில் உள்ள 8 பேரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இதில் ஆலயப் பூசகர் உள்ளிட்ட 5 பேர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இவர்கள் உடல் மோசமடைவதற்கு முன்னர் விடுவிக்கப்பட வேண்டும். இவர்கள் விடுவிக்கப்படாவிட்டால் உடனடியாக வடக்கு – கிழக்கில் போராட்டம் முன்னெடுக்கப்படும். இதற்கான முன்னெடுப்புக்களைப் பொது அமைப்புக்கள் மற்றும் சமய அமைப்புக்கள் முன்னெடுத்துள்ளனர்.

பொய்க்குற்றச்சாட்டுக்களைச் சுமத்திய நெடுங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர் அந்தப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும். இனவாதச் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். புலம்பெயர் வாழ் தமிழ் மக்களும் அவர்களைச் சிறையில் இருந்து விடுவிக்க இராஜதந்திர அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றார்.

## போதைப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கம்பஹா, கந்தானை பிரதேசத்தில் நேற்றுப் பகல் இடம்பெற்றுள்ளது.

நான்கு பிள்ளைகளின் தந்தையான 46 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரது வீட்டுக்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹயஸ் வாகனத்தில் வந்த நான்கு பேர் அடங்கிய வன்முறைக் கும்பல், மேற்படி நபர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பியோடியுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர், வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், கொலைச் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# தமிழர்களுக்கு நான் ஒருபோதும் துரோகம் இழைக்கவே இல்லை!

## இப்படிக் கூறுகின்றார் பொன்சேகா



"தமிழ் மக்களுக்கு நான் ஒருபோதும் துரோகம் இழைத்தது கிடையாது. போர் முடிவுக்கு வந்ததால் அவர்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் உருவாகியுள்ளது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு வடக்கு, கிழக்கு நிலைவரம் எவ்வாறு உள்ளது, ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்று சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி. கூறியுள்ளாரே என ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"விக்னேஸ்வரன் என்பவர் அடிப்படைவாத நோக்கில் அரசியலை முன்னெடுப்பவர். அரசியலில் அவர் முதிர்ச்சியடைந்த நபரும் கிடையாது. வடக்கு, கிழக்கில் முதிர்ச்சியடைந்த அரசியல்வாதிகள் உள்ளனர். அவர்கள் இவ்வாறு முட்டாள்தனமாகக் கருத்துகளை முன்வைக்கமாட்டார்கள்.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கில் எனக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வாக்குகள் கிடைக்கப்பெற்றன. அதுவும் போர் முடிவடைந்து குறுகிய காலப்பகுதிக்குள். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 85 ஆயிரம் வாக்குகள் மாத்திரமே கிடைத்தன. வடக்கு மக்களின் ஆசிர்வாதம் எனக்கு இருந்தது. தமிழர்களுக்கு நான் ஒருபோதும் துரோகம் இழைத்தது கிடையாது." – என்றார்.

### கைதானவர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

"08.03.2024 அன்று எமது வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வளாகத்தில் மகா சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த எமது ஆலயத்தின் பரிபாலன சபையின் நிர்வாகிகள் மீதும், சிவ பக்தர்கள் மீதும் பொலிஸார் நடத்திய வன்முறைகளை எதிர்த்தும், கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள சிவபக்தர்களை விடுவிக்கக் கோரியும் பாரியளவிலான வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நெடுங்கேணி சந்தியில் ஆரம்பிக்கும் இந்தப் போராட்டமானது, வவுனியா வடக்கு பிரதேச செயலகம் வரைக்கும் பேரணியாகச் சென்று, இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மற்றும் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கான மகஜர் கையளிக்கப்படும்.

அரச அநீதிக்கு எதிரான இந்தப் போராட்டத்தில், அனைத்துத் தமிழ் மக்களையும், சமயம் சார்ந்த அமைப்புக்களையும், தமிழ் அரசியல்வாதிகளையும், தமிழ் உணர்வாளர்களையும், சிவில் சமூகத்தினரையும், பல்கலைக்கழக மாணவர்களையும், ஊடகங்களையும் கலந்துகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்." – என்றுள்ளது.

### மொட்டுவின் வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தின்போது தீர்க்கமான சில முடிவுகள் எடுக்கப்படவுள்ளன என்று அறியமுடிகின்றது.


அமெரிக்காவில் இருந்து பஸில் நாடு திரும்பிய பின்னர், மஹிந்தவுடன் இணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அண்மையில் சந்திப்புப் பேச்சு நடத்தி இருந்தார்.

இதன்போது அடுத்த தேர்தல், அரச கூட்டணி உறவு மற்றும் எதிர்கால நகர்வுகள் குறித்து கலந்துரையாடப்பட்டிருந்தன.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தன்னை ஆதரிக்குமாறு ரணில் விக்கிரமசிங்க விடுத்த கோரிக்கைக்கு ராஜபக்ஷக்கள் நேரடிப் பதிலை வழங்கவில்லை.

இந்நிலையிலேயே மொட்டுக் கட்சியின் உயர்பீடம் கூட்டப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தின் எட்டப்படும் முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு, ரணில் விக்கிரமசிங்கவுடன் மஹிந்த, பஸில் இரண்டாம் சுற்றுச் சந்திப்பை நடத்தவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது அடுத்த தேர்தல், கூட்டணி தொடர்பில் இறுதியான முடிவு எடுக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# எதேச்சாதிகாரத்தை எதிருங்கள்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் இலங்கை மக்களின் மீது அடக்குமுறைச் சட்டங்களை ஏவி விடுவதன் மூலம் எதேச்சாதிகாரத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. அந்த அரசின் அத்தகைய ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக சர்வதேச நாணய நிதியம் காத்திரமான எதிர்ப்பையும் ஆட்சேபத்தையும் வெளிப்படுத்த வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஒரு கடிதம் மூலம் சர்வதேச நாணய நிதியத்தைக் கோரியிருக்கின்றது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதி இயக்குநர் மீனாட்சி கங்குலி அம்மையார் இது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திற்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் சர்வதேச நாணய நிதியமும் காத்திரமாகப் பங்களிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டி இருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

இலங்கை அரசு சிவில் சமூகத்தை மோசமாக அடக்கி, ஒடுக்கும் விதத்திலான சட்டங்களைக் கொண்டு வருகின்றது. இத்தகைய வேலைத்திட்டத்தை - அடக்குமுறைச் சட்டங்களை - கைவிடுமாறு இலங்கை அரசிடம் சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்த முடியும், வலியுறுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசு சாரா நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான சட்ட மூலம் இதுபோன்ற அடக்குமுறை சட்டங்களை யாக்கும் முயற்சியில் ஒன்று என்று சுட்டிக்காட்டியுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம், இத்தகைய சட்டங்கள் அடிப்படை உரிமைகள், சுதந்திரங்கள், பொதுப் பாதுகாப்பு , நல்லாட்சியை மேம்படுத்தி ஊழலை எதிர்த்துப் போராடுதல் போன்றவற்றில் பெரும் பின்னடைவை - தாக்கத்தை - ஏற்படுத்தும் என்றும் தெளிவுபடுத்தியிருக்கின்றமை அவதானிக்கத்தக்கது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீண்டெழுவதற்கு நாட்டைப் பிணையெடுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திட்டங்கள், நடவடிக்கைகள் மெச்சத்தக்கவை.

ஆயினும், ரணில் விக்கிரமசிங்க அரசின் எதேச்சாதிகாரச் சட்டங்களை அங்கீகரித்துப் பார்த்திருப்பது நாட்டின் அச்சுறுத்தல் நிலைமைக்கு சர்வதேச நாணய நிதியமே உதவியாய் அமைந்துவிடும் என அவர் எச்சரிக்கிறார்.

அதுமாத்திரமல்ல,ஜனாதிபதிரணிலின்அரசு அண்மைக்காலத்தில் கொண்டுவந்த - இனிக் கொண்டுவர உத்தேசத்துள்ள - பல அடக்குமுறைச் சட்டங்களின் விவரங்களையும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் விலாவாரியாக விவரங்களுடன் வெளியிட்டிருக்கின்றது.

2022 இல் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நிலையில், இலங்கையர்கள் நல்லாட்சி மற்றும் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கோரினர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதி இயக்குநர் மீனாட்சி கங்குலி, அந்த நிலைமைக்கு மாறாக இப்போது மனித உரிமைகளை அச்சுறுத்தும் மற்றும் சீர்திருத்தங்களை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் கொடூரமான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை மக்கள் எதிர்கொள்கின்றனர் என்பதை விசனத்துடன் சுட்டுகின்றார்.

“மக்களின் எதிர்ப்புப் போராட்டங்கள் தான் ஜனாதிபதி விக்கிரமசிங்கவை அதிகாரத்திற்கு கொண்டு வர உதவின, ஆனால் அவரோ மாற்றத்திற்கான அழைப்புகளுக்கு செவிசாய்ப்பதற்கு பதிலாக, பொது மக்களின் அமைதியான எதிர்ப்புக் காட்டலுக்கான உரிமையைக் கட்டுப்படுத்துகிறார்” - என்று மீனாட்சி கங்குலி சுமத்தும் குற்றச்சாட்டு இலங்கையின் யதார்த்த பூர்வமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றது.

முன்மொழியப்பட்ட அரச சார்பற்ற நிறுவன சட்டத்தைக் கைவிடுமாறும், இணைய வழிக் காப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்குமாறும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருமாறும் அரசாங்கத்திடம் பகிரங்கமாக அழைப்பு விடுப்பதன் மூலம் சர்வதேச நாணய நிதியம் இலங்கையில் அதன் வேலைத்திட்டத்தின் நம்பகத்தன்மையையும் செயல்திறனையும் பாதுகாப்பதுடன் மனித உரிமைகள் தரநிலைகள், மனித உரிமைகள் போன்றவற்றைப் பேணவும் வழி செய்ய வேண்டும் எனக் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

இலங்கையின் இந்த நெருக்கடியானது தவறான நிர்வாகம் மற்றும் ஊழலில் அதன் வேர்களைக் கொண்டுள்ளது என்பதை அழுத்தமாக வெளிப்படுத்துவதாக இலங்கையின்பொருளாதாரமீட்சிக்குஆதரவளிக்கும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் பிற சர்வதேச பங்காளிகளின் நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்று கூறும் கங்குலி “அவர்களின் (சர்வதேச நாணய நிதியம் மற்றும் பிற சர்வதேச பங்காளிகளின்) முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமானால், அடிப்படை சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைக் குறைக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எதிராக அவர்கள் உறுதியாக நிற்க வேண்டும்.”- என்றும் கூறுகின்றார். அது முற்றிலும் சரியான கூற்று.

# தி.மு.கவுக்கு உண்மையை பேசுகின்ற தைரியம் கிடையாது என்கிறார் குஷ்பு

"பெண்களை கேவலப்படுத்துவது, அவதூறாக பேசுவது, பெண் குறித்து தவறான விஷயங்களைப் பரப்புவது, இது தி.மு.கவின் டி.என்.ஏ. குஷ்புவின் டி.என்.ஏ. கிடையாது. இந்த பூச்சாண்டி வேலை எல்லாம் என்னிடம் காட்டாதீர்கள். நான் தவறு செய்தால், குழந்தையாக இருந்தாலும் கீழே விழுந்து மன்னிப்புக் கேட்பேனே தவிர பயந்து ஓடமாட்டேன்."

– இவ்வாறு நடிகை குஷ்பு கூறியுள்ளார்.

தமிழகத்தில் போதைப் பொருள்களை ஒழிக்க வலியுறுத்தி அண்மையில் பா.ஜ.க. சார்பில் செங்குன்றம் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நடிகை குஷ்பு கலந்துகொண்டார். பின்னர், செய்தியாளர்களைச் சந்தித்த அவர், "தமிழகத்தில் உள்ள தாய்மார்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் பிச்சைப் போடுவதால், அவர்களது வாக்குகளைப் பெற்றுவிடலாம் என தி.மு.க. நினைக்கிறது" என்று பேசினார். குஷ்புவின் இந்தக் கருத்துக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் கண்டனம் எழுந்தது.

இந்த நிலையில், இச்சம்பவம் குறித்து குஷ்பு வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"உண்மை எப்படி பயத்தைக் கிளப்பி விடும் என்பதை அழகா பார்த்துக் கொண்டிருக்கிறேன். தி.மு.கவில் இருக்கும் அத்தனை பேரும், அமைச்சர், பேச்சாளரில் இருந்து கட்சியின் கடைநிலை தொண்டர் வரை, அனைவரும் என்னைப் பற்றி பேசி வீடியோ வெளியிட்டுக் கொண்டுள்ளனர். நான் பேசிய பழைய ட்வீட் ஒன்றை எடுத்து, அதை வைத்து ஏதோ ஒன்றை கூறி வருகின்றனர்.

நான் எதையுமே டெலீட் செய்யாமல் இருக்கிறேன். அனைத்துமே என்னுடைய சமூக வலைதளப் பக்கத்தில் இருக்கிறது. நான் பேசும்போது ஒரு ஐடி விங்கோ, வார்ரூம் வைத்துக்கொண்டு நான் பேசுவது இல்லை. நேருக்கு நேர் பேசக்கூடிய தைரியம் எனக்கு இருக்கிறது. திமுகவில் நான் மிகவும் மரியாதை வைத்திருக்கக்கூடிய அமைச்சர் உள்பட, பலர் எனக்கு எதிராக எச்சரிக்கை விடுத்து ஒருசில விஷயங்களைக் கூறியிருக்கின்றனர்.

நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஏன் அவ்வளவு பயந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? குஷ்பு பேசினால் அவ்வளவு பயமா? காரணம் குஷ்பு உண்மையை பேசுவா, தைரியமாக பேசுவாள். நான் பேசியதற்கு, தவறான அர்த்தம் எடுத்துக்கொண்டு அதை மட்டும் மக்களிடம் காட்டி, மக்களைத் திசைதிருப்பும் வேலையை தி.மு.கவினர் செய்கின்றனர்.

நான் பேசிய பழைய காணொலிகளையும், ட்வீட்களையும் எடுத்துப் போடுவது தி.மு.கவின் டி.என்.ஏ. காரணம், நடப்பு பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு உங்களிடம் ஏதும் இல்லை.



மக்களுக்கு என்ன செய்தோம், என்ன செய்து வருகிறோம் என்பதை பற்றி பேசுங்கள். அதை சொல்வதற்கு உங்களுக்கு தைரியம் இல்லை, இருக்கவும் இருக்காது. காரணம், தி.மு.க. பற்றி எனக்கு நன்றாக தெரியும். அந்த தைரியம் உங்கள் தலைவருக்கும் இல்லை, உங்கள் யாருக்கும் இல்லை. சுற்றி வளைத்துப் பேசும் பழக்கம் குஷ்புவுக்கு கிடையாது. நேரடியாகத்தான் பேசுவேன்."

– என்றார்.

# 2ஆம் கட்ட பா.ஜ.க. பட்டியல் வெளியீடு 72 பேரில் முக்கிய வேட்பாளர்கள் இணைப்பு

2024 மக்களவைத் தேர்தலில் 72 தொகுதிகளுக்கான இரண்டாவது கட்ட வேட்பாளர்கள் பட்டியலை பா.ஜ.க. வெளியிட்டுள்ளது.

மக்களவைத் தேர்தல் திகதி விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படும் சூழலில், அனைத்து அரசியல் கட்சிகளும் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், பா.ஜ.க. சார்பில் தேர்தலில் போட்டியிடும் 72 தொகுதிகளுக்கான 2 ஆவது கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

கர்நாடகா மற்றும் மகாராஷ்டிராவில் தலா 20, குஜராத்தில் 7, ஹரியாணா மற்றும் தெலங்கானாவில் தலா 6 பேர் மற்றும் மத்தியப் பிரதேசம், இமாச்சல், திரிபுரா, தாத்ரா நாகர் ஹவேலி உள்ளிட்ட 72 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை பா.ஜ.க. வெளியிட்டுள்ளது.

ஹரியாணா முதல்வர் பதவியில் இருந்து விலகிய மனோகர் லால் கட்டாருக்கு அம்மாநிலத்தின் கர்ணல் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சர்களான நிதின் கட்கரி, பியூஷ் கோயல் ஆகியோரது பெயர்களும் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன. முன்னாள் முதல்வர்களான திரிவேந்தர் சிங் ராவத் மற்றும் பசவராஜ் பொம்மை ஆகியோர் இம்முறை மக்களவைத் தேர்தல் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர்.

டில்லியில் களம் காணும் இருவருமே புதிய முகங்கள் ஆவர். கிழக்கு டில்லியில் ஹர்ஷ் மல்ஹோத்ராவும், மேற்கு டில்லியில் யோகேந்திர சந்தோலியாவும் இம்முறை பா.ஜ.க. சார்பில் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

கர்நாடாவில் பா.ஜ.க. இம்முறை 10 புதிய முகங்களுடன் மக்களவைத் தேர்தலைச் சந்திக்கிறது. மத்திய அமைச்சர் பிரஹலாத் ஜோஷி தர்வாத் தொகுதியில் இருந்தும், கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதல்வர் பி.எஸ்.எடியூரப்பாவின் மகன் பி.ஒய்.ராகவேந்திரா ஷிமோகா தொகுதியிலிருந்து போட்டியிடுகின்றனர்.



பா.ஜ.க. இளைஞர் அணி தலைவர் தேஜஸ்வி சூர்யா பெங்களூர் தெற்குத் தொகுதியின் வேட்பாளராக களம் இறங்குகிறார். மைசூரில் இம்முறை யதுவீர் கிருஷ்ணதத்தா வதியாருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த முறை இத்தொகுதியில் பிரதாப் சிம்ஹாவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

முதல் பட்டியலைப் போலவே இந்த இரண்டாவது பட்டியலிலும் தமிழகத்தைச் சேர்ந்த வேட்பாளர்களின் பெயர்கள் எதுவும் இடம்பெறவில்லை. தமிழ்நாடு, பிஹார் மற்றும் ஒடிசாவில் நடந்து வரும் கூட்டணி பேச்சுவார்த்தைகளால் இந்த மாநிலங்களுக்கான வேட்பாளர்களை இறுதி செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் ஜோ பைடன் - ட்ரம்ப்

## பரபரப்பாகும் தேர்தல் களம்




அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இந்த ஆண்டு இறுதியில் நடக்கவுள்ளது. இந்தத் தேர்தலில் மீண்டும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குடியரசுக் கட்சியை சார்பில் போட்டியிடுகிறார். அதேபோல் ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் போட்டியிடவுள்ளார். இருவரும் நேருக்கு நேர் களம் காணவிருப்பதால் அங்கே தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

அமெரிக்காவில் பிரதான அரசியல் கட்சிகள் என்றால் ஜனநாயக கட்சி மற்றும் குடியரசு கட்சிகள்தான். ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடன் தற்போது அமெரிக்க ஜனாதிபதியாக உள்ளார். இந்த ஆண்டு அவரின் பதவிக்காலம் முடியவுள்ளதால் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடக்கவுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் களம் சற்று வித்தியாசமானது. அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக போட்டியிட விருப்பம் உள்ளவர்கள் கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெறவேண்டும். அதற்கு மாகாணங்கள் தோறும் வாக்குப்பதிவு நடைபெறும். இரு கட்சிகள் சார்பிலும் நடக்கும் மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டு தங்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை தேர்ந்தெடுப்பார்கள்.

ஜனநாயகக் கட்சியின் சார்பில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன், டீன் பிலிப்ஸ், மரியன்னே வில்லியம்சன் ஆகியோருக்கு இடையில் கடும் போட்டி நிலவி வந்தது. ஆனால், ஜோ பைடனுக்கு ஆதரவு அதிகமாக கிடைத்தது. இதையடுத்து ஜனநாயகக் கட்சியின் சார்பில் அவரே மீண்டும் போட்டியிடுகிறார்.

அதேபோல், குடியரசுக் கட்சியின் சார்பில் டொனால்ட் ட்ரம்ப், நிக்கி ஹேலி, விவேக் ராமசாமி இடையே போட்டி நிலவியது. மாகாணங்களில் நடந்த தேர்தலில் பெரிய ஆதரவு இல்லாததால் விவேக் ராமசாமி விலகினார். ட்ரம்ப், ஹேலி களத்தில் இருந்த நிலையில் கடைசி நேரத்தில் அவரும் ஆதரவு குறைவின் காரணமாக விலகினார். இதனால், தற்போது ட்ரம்ப் ஜனாதிபதி வேட்பாளராக அக்கட்சியின் சார்பில் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

பெரும்பாலான கருத்துக் கணிப்புகள் ட்ரம்புக்கு வாய்ப்பு அதிகமாக இருப்பதாகக் கூறுகின்றன. ஆனால், 77 வயதான ட்ரம்புக்கு பெரிய சவால் இருக்கிறது. ட்ரம்ப் மீது நான்கு குற்ற வழக்குகள் இருக்கின்றன. இவற்றில் ஏதேனும் ஒன்று அவருக்கு எதிராக அமைத்தால் கூட தேர்தல் முடிவில் பெரும் தாக்கம் ஏற்படும் எனக் கூறப்படுகிறது.

# காசாவில் நான்கு மாதங்களில் அதிக குழந்தைகள் உயிரிழப்பு




கடந்த 4 ஆண்டுகளில் உலகம் முழுவதும் நடந்த போர்கள், மோதல்களால் ஏற்பட்ட குழந்தைகள் உயிரிழப்பைவிட காசாவில் பலியான குழந்தைகளின் எண்ணிக்கை அதிகம் என்று பாலஸ்தீனத்துக்கான ஐ.நா.வின் அகதிகள் மறுவாழ்வு மைய பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பிலிப் லாஸரினி என்ற ஐ.நா. பிரதிநிதி பகிர்ந்த பதிவில்,

"காசாவில் கடந்த 4 மாதங்களில் உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கை உலகம் முழுவதும் கடந்த 4 ஆண்டுகளாக நடந்த பல்வேறு மோதல்களில் உயிரிழந்த ஒட்டுமொத்த குழந்தைகளின் எண்ணிக்கையைவிட அதிகம். கடந்த 2019 முதல் 2022ஆம் ஆண்டு வரை உலகம் முழுவதும் நடந்த பல்வேறு மோதல்களில் 12,193 குழந்தைகள் இறந்தனர். ஆனால், காசாவில் கடந்த 4 மாதங்களில் மட்டும் 12 ஆயிரத்து 300 இற்கும் அதிகமான குழந்தைகள் இறந்துள்ளனர்.

இந்தப் போர் குழந்தைகளின் மீதான போர். அவர்களின் பால்ய காலம், அவர்களின் எதிர்காலத்தின் மீதான போர். இந்தப் போர் தொடங்கி 3 வாரங்களிலேயே 3600 பாலஸ்தீனிய குழந்தைகள் கொல்லப்பட்டுவிட்டனர். காசாவில் பெற்றோராக இருப்பது ஒரு பெரும் சாபம்" – என்று குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் இதுவரை 31 ஆயிரத்து 184 பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள், குழந்தைகள் என அப்பகுதி சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக கடந்த ஒ க்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் படையினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 1,160 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். 250 இற்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள், வெளிநாட்டவர் கடத்திச் செல்லப்பட்டனர். இந்நிலையில் 120 பேர விடுதலையாகினர். 32 பேர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. எஞ்சியவர்களை மீடக தொடர்ந்து இஸ்ரேலியர்கள் குரல் கொடுத்து வருகின்றனர். இருப்பினும் இஸ்ரேல் தாக்குதலை நிறுத்தவில்லை.

காசாவில் ரமழான் மாதம் போர், பசி, பஞ்சத்துக்கு மத்தியில் தொடங்கியுள்ளது. ரமழான் தொடங்கியும் கூட போரின் வன்முறையும், கொடூரமும் நிற்கவில்லை, குறையவில்லை. கடந்த ரமழான்களின் நினைவுகள் எங்களை அரவணைக்கின்றன என்று காசாவாசிகள் தங்கள் ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

ஐந்து மாதங்களுக்கு மேலாக போர் நீடித்துவரும் வடக்கு காசாவில் ஆயிரக்கணக்கான மக்கள் மோசமான நிலையில் உள்ளனர்.





# ஐ.எம்.எவ்வின் 33 வீத கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தவறிய இலங்கை



சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான இரண்டாவது மீளாய்விற்காக நாட்டிற்கு வருகை தந்துள்ள பிரதிநிதிகள் பல்வேறு தரப்பினருடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

இதற்கமைய சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் மின்சார சபை மற்றும் இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்தனர்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவிற்கும், சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீட்டர் புரூவருக்கும் இடையே நேற்று முன்தினம் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த நிறுவனங்களின் கடந்த வருட, தற்போதைய நிதி நிலைமைகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின் போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, 2024 பெப்ரவரி இறுதிக்குள், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டியவற்றில் 33 வீத கடப்பாடுகளை இலங்கை பூர்த்தி செய்யத் தவறியுள்ளதாக வெரிட்டே ரிசேர்ச் ஆய்வு நிறுவனம் கூறுகிறது.

இலங்கையின் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளில் பெரும்பாலானவை ஆட்சியை மேம்படுத்துவதுடன் தொடர்புடையவை என வெரிட்டே ரிசேர்ச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிப்படைத்தன்மை மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சட்டங்களை இயற்றுவதற்கான உறுதிப்பாடுகள் இதில் அடங்குகின்றன.





# எமது மக்களின் குரல்கள் ஓங்கி ஒலிக்காத வண்ணம் தமிழர்களை அடிமைத்தனமாக வைத்திருக்கின்றனர்

## காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவி விசனம்

(கே.வசந்தன்)

ஆலயத்தில் வழிபடக் கூட இங்கு எமக்கு உரிமையில்லை. இதற்கு எதிராக அனைவரும் ஓரணியில் திரண்டு குரல் கொடுக்க வேண்டும் என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவி சிவானந்தன் ஜெனிற்றா தெரிவித்துள்ளார்.




வவுனியா மாவட்ட வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் பொதுச்சபை கூட்டம் வவு னியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. பொதுக்கூட்டம் நிறை வில் ஊடகங்கங்களுக்கு கருத்து தெரி விக்கும் போதே வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்க ளின் உறவுகளின் சங்கத்தின் தலைவி சிவானந்தன் ஜெனிற்றா மேற்குறிப்பிட்ட வாறு கருத்து தெரிவித்தார். அவர் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

காணாமல் போனவர்களிற்கான அலுவலகத்தின் ஊடாக உறவுகளை அங்கு அழைத்து அவர்களுக்கான மரணச்சான்றிதழுக்கான பதிவுகளை மேற்கொள்ளுகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டுள்ளமைக்கான சான்றிதழும் எமக்கு வேண்டாம் எனவும் தெரிவித்து வருகின்றோம்.

ஆனால் காணாமல் போனவர்களிற் கான அலுவலகத்தினர் உறவினர்க ளுக்கு தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தி கட்டாயம் பதிவு செய்யுங்கள், பதிவு செய்யப்பட்டால் மாத்திரமே உங் கள் உறவு காணாமல் ஆக்கப்பட்டவர் என்ற பதிவு இருக்கும், இல்லாவிடில் பதிவு இருக்காது எனவும், முச்சக்கர வண்டிக்கு நாங்கள் பணம் தருகின் றோம் வாருங்கள் என கட்டாயப்படுத்து கின்றனர். இவ்வாறு மிகக்கேவலமான செயற்பாட்டினைத்தான் காணாமல் போனவர்களிற்கான அலுவலகத்தினர் செய்து வருகின்றனர்.

எனவே காணாமல் போனவர்களிற் கான அலுவலகத்தினை நாம் ஆரம்ப கட்டத்திலேயே முற்றும் முழுதாக மறுத்திருந்தோம். அவர்கள் மக்களை ஏமாற்றி, பொய்களைக் கூறி, அவர்களி டம் பதிவுகளை மேற்கொள்கின்றனர். எனவே சர்வதேச நாடுகள் இதற்கு அனுசரனை வழங்காது எமக்கான சர்வதேச நீதியினைப் பெற்றுத்தர வேண்டும்.

தமிழ் மக்கள் அறவழியில் போராடு கின்ற ஒவ்வொரு போராட்டத்தையும் நசுக்குகின்ற முகமாக தடையுத்தரவு களை விதித்து மிகவும் சட்டவிரோதமான கைதுகளை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். கைது இடம்பெறுவதை பார்க்கின்ற போது உண்மையாகவே அவர்கள் செய்யாத குற்றத்திற்கு குற்றங்கள் செய்ததாக எழுதி பொலிஸ் உத்தியோகத்தர்கள் நீதிமன்றில் ஆஜர் படுத்துகின்றனர் என்பது தெளிவா குகின்றது.

நான் கூட பொலிஸ் உத்தியோகத்த ருக்கு அடிக்கவே இல்லை. பொலிஸ் உத்தியோகத்தர் எனது கையை உடைக்க முற்பட்ட சமயத்தில் பொலி ஸாரை தள்ளிவிட்டேனே தவிர அவர் களை அடிக்கவில்லை. ஆனால், பொலி ஸார் எழுதியுள்ளனர் நான் பொலிஸ ாருக்கு அடித்ததாக. அப்படியான பொய்க் குற்றச்சாட்டுக்களை பொலி ஸார் மேற்கொள்கின்றனர். எட்டு நாள் கள் நான் சிறையில் இருந்தேன். தொடர்ச்சியாக வழக்கு விசாரணைகள் இடம்பெறுகின்றன. எனது கையடக்க தொலைபேசியினை விசாரணைக்கு உட்படுத்தவதற்காகப் பெற்றுக்கொண் டுள்ளனர்.

வெடுக்குநாறி ஆலயத்தில் சிவ ராத்திரிக்கு வழிபாட உரிமையில்லை. பாதுகாப்பு பிரிவினர் அவர்களை அடாவடியாக தாக்கி சாப்பாத்து கால்களுடன் ஆலயத்தினுள் சென்று அபிசேக பொருட்களை கால்களால் தட்டுகின்ற அடாவடி செயற்பாடு இங்கு இடம்பெறுகின்றது.

அதுமட்டுமின்றி 8 பேரை குற்ற மின்றி கைது செய்துள்ளனர். ஆல யத்தில் வழிபட கூட இங்கு உரிமை யில்லை. அவர்களின் உறவினர்கள் தெருவில் நின்று அழுகின்றனர். இந்த நாட்டில் வாழ உரிமையில்லை. நில உரிமை, ஆலய வழிபாடு உரிமை, ஜனநாயக போராட்ட உரிமை எவையும் இல்லை. ஆட்சிகள் மாறுகின்றன. ஆள்கள் மாறுகின்றனர். புதிய சட்டங்கள் வருகின்றன. எப்படி எம்மை அடக்க முடியுமோ அப்படி எல்லாம் எம்மை அடக்குகின்றனர். எமது குரல்கள் ஓங்காத வண்ணம் தமி ழர்களை அடிமைத்தனமாக வைத் திருக்கின்றனர். இவற்றுக்கு எதிராக நாம் அனைவரும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும். - என மேலும் தெரிவித்தார்.

# இலங்கை வங்கியின் தலைவராக சாகல ரத்நாயக்கவின் சகோதரர்



இலங்கை வங்கிக்குப் புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என இலங்கை வங்கி நேற்று கொழும்பு பங்குச்சந்தைக்கு அறிவித்தது.

இலங்கை வங்கியின் புதிய தலை வராக காவன் ரத்நாயக்க நியமிக்கப பட்டுள்ளார்.

இதுவரை தலைவராக செயற்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா, நேற்று முதல் அந்த பதவி யில் இருந்து விலகுகின்றார் எனவும் புதிய தலைவர் இன்று முதல் கடமைகளை ஆரம்பிக்கவுள்ளார் எனவும் இலங்கை வங்கி தெரிவித் துள்ளது.

தேசியப் பாதுகாப்பு ஆலோசகரான சாகல ரத்நாயக்கவின் சகோதரரான காவன் ரத்நாயக்க கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் பட்டதாரியாவார்.




# வரி செலுத்தாத வர்த்தக விளம்பரப் பலகைகளை அதிரடியாக நேற்று அகற்றியது மன்னார் நகரசபை

(மன்னார் நிருபர்)

மன்னார் நகர சபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகளை மேற் கொள்ளும் வர்த்தக நிலையங்களில் உரிய அனுமதி பெற்று வரி செலுத்தாது காட்சிப்படுத்தப்பட்ட விளம்பர பலகைகள் நேற்றைய தினம் புதன்கிழமை மன்னார் நகர சபை ஊழியர்களால் அகற்றப்பட்டன.

மன்னார் நகர சபையிடம் உரிய வரி செலுத்தி அனுமதி பெறாது உள்ளூர் வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்களில் நீண்ட நாள்களாகக் காட்சிப் படுத்தப்பட்டிருந்த மொபிடெல் நிறுவனம் உள்ளடங்களாக பல்வேறு நிறுவனங்களின் விளம்பரக் காட்சிப் பலகைகள் வர்த்தக நிலையங்களில் இருந்து அகற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு காட்சிப் படுத்தப்பட்டிருக்கும் விளம்பர பலகைகளுக்கு அனுமதி பெற்று, வரியைச் செலுத்தி காட்சிப் படுத்துமாறு நகரசபையினால் முன்னதாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டு, கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அதன் பின்னரும் உரிய அனுமதியைப் பெறாத வர்த்தக நிலையங்களின் விளம்பர பலகைகள் மேற்கண்டவாறு அகற்றப் பட்டுள்ளன.

மேலும் நகர சபை எல்லைக்குள் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள சிறு வியாபார வர்த்தக நிலையங்கள்,சிற்றுண்டி நிலையங்கள், குளிர்பான நிலையங்களையும் அகற்றுவதற்கான நடவடிக்கைகளையும் மன்னார் நகரசபை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.











# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் காரியாலய மகளிர் தின நிகழ்வு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம் 2024 ஆம் ஆண்டிற்கான சர்வதேச மகளிர் தினத்தை சிறப்பிக்கும் முகமாக 'பெண்களுக்கான ஆதரவின் மூலம் பொருளாதார மாற்றம்: நெருக்கடிக்கு ஒரு பதிலளிப்பு.' ('Economic Trans formation through Support for Women: A Response to the Crisis.') என்ற நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் தனியார் விடுதியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சமகால பொருளாதார நெருக்கடிக்குள் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் துறைசார் அதிகாரிகளின் கருத்துபரிமாறல்கள் இடம்பெற்றன.

குறிப்பாக பெண் தொழிற்படையினர் (Labour Force), புலம்பெயர் தொழிலாளர்களாகவுள்ள பெண்கள் (Migrant Workers), ஆடை தொழிற்சாலைகளில் கடமையாற்றும் பெண்கள் (Garnment Sectors) மற்றும் முறைசாரா (Informal Sector) முன்னிலைப்படுத்தி துறைசார் கருத்துக்கள் இடம்பெற்றன.













# அமெரிக்க உளவு விமானம் இலங்கையை வந்தடைந்தது

அமெரிக்க உளவு விமானத்தை பயன்படுத்தி தற்பொழுது இரத்மலானை விமான நிலையத்தில் விசேட பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத் தின் தலையீட்டுடன் இந்த பயிற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத் திற்கு சொந்தமான N7700 Bombardier விமானத்துடன் அதன் ஊழியர்களும் இரத்மலானை விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளனர்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க , இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், விமானப்படை தளபதி , கடற்படை தளபதி ஆகியோர் நேற்று முன்தினம் இவர்களை வரவேற் றுள்ளனர்.

தேசிய பாதுகாப்பை ஸ்திரப்படுத்தும் வகையிலும் கடல் எல்லையை கண் காணிப்பது தொடர்பிலும் இதன்போது விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.

புலனாய்வுத் தகவல்கள் மற்றும் உளவு செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளன.

இரத்மலானை விமான நிலையத்தை வந்தடைந்த அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தின் இந்த ஜெட் ரக விமானம் பல நவீன தொழில்நுட்ப சாதனங்களுடன் 40 ஆயிரம் அடிக்கும் அதிகமான உயரத்தில் பறக்கும் திறன் கொண்டதாகும்.

14 மணி நேரம் தொடர்ந்து பறக் கக்கூடிய ஆற்றலை இந்த விமானம் கொண்டுள்ளது.

இதேவேளை, இந்த வருடம் ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் இலங்கை விமானப்படைக்கு சுமார் 22 மில்லியன் டொலர் பெறுமதியான நவீன Beechcraft 360 ER ரக விமானத்தை அமெரிக்க அரசாங்கம் வழங்கவுள்ளது.

N7700 Bombardier என்பது Beechcraft 360 ER வகை விமானத்தின் நடவடிக்கை கட்டமைப்பிற்கு மிக நெருக்கமான விமானமாகும்.

இலங்கை விமானப்படையின் விமா னிகள், தொழில்நுட்ப ஊழியர்கள் மற் றும் ஏனைய அதிகாரிகளுக்கு அதன் செயற்பாடுகள், பாதுகாப்பு நடவடிக்கை கள் மற்றும் விமான நிலைமைகள் தொடர்பில் நடைமுறைப் பயிற்சிகளை வழங்கும் நோக்கில் இந்த பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விமானப்படையின் விமானிகள் மற்றும் பொறியியலாளர்கள் அடங்கிய குழுவொன்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் அமெரிக்கா செல்லவுள்ளதாக விமானப் படை ஊடகப்பேச்சாளர் குரூப் கெப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கை விமானப்படையி டம் கடல் மற்றும் தரைவழி ஆக்கிரமிப்பிற் காக இரண்டு Beech King Air 200 விமானங்கள் உள்ளமையுடன், இந்த புதிய Beechcraft 360 ER விமானம் கிடைத்த பின்னர், நாட்டின் கடல் பாதுகாப்பு வலுப்பெறும்.

இந்த பயிற்சி தொடர்பில் இலங்கைக் கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சமூக வலைத்தள பக்கத்தில் பதிவிட் டுள்ளார்.


மனிதாபிமான உதவி, இடர் நிவார ணம் மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஆகிய வற்றினூடாக ஒத்துழைப்பை மேம் படுத்துவதற்கான கூட்டு முயற்சிக்கு அமெரிக்கா ஆதரவு வழங்குவதாகவும் பாதுகாப்பான இந்தோ பசுபிக் பிராந்தி யத்திற்காக முன்நிற்பதாகவும் அவர் அதில் பதிவிட்டுள்ளார்.











# நெல் ஏற்றிச் சென்ற கன்ரர் ரக வாகனம் புளியங்குளத்தில் விபத்து ஒருவர் காயம்

(கே.வசந்தன்)

வவுனியா, புளியங்குளம் பகுதியில் நெல் மூடைகளை ஏற்றிச்சென்ற வாகனம் நேற்று மாலை விபத்திற்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவிலிருந்து நெல் மூடைகளை ஏற்றிக்கொண்டு வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த கன்ரர் ரக வாகனம் புளியங்குளம் சந்திக்கு அண்மையில் சென்று கொண்டிருந்த போது வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளானது.

விபத்தில் வாகனத்தில் பயணித்த ஒருவர் காயமடைந்தார். வாகனத்தின் முன்சக்கரம் வெடித்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. விபத்து தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நாட்டில் நீர் பாவனை 15 வீதத்தால் உயர்வு



நாட்டில் நிலவும் வறட்சி காரணமாக நீர் பாவனை 15 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இதன்காரணமாக மேட்டுநிலப் பகுதிகள் மற்றும் நீர் விநியோகக் கட்டமைப்பின் முடிவிடங்களில் வாழும் மக்களுக்கு குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகிக்கப்படுவதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இதுவரை எந்தவொரு பகுதிக்கும் நீர் விநியோகம் நிறுத்தப்படவில்லை என சபை குறிப்பிட்டுள்ளது.

இதனால் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

தற்போது நிலவும் வறட்சி, அடுத்த மாதம் வரை நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.




# யாழ். பல்கலை பட்டமளிப்பு நேரலைக்கான இணைப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, இன்று 14 ஆம் திகதி முதல் நாளை மறுதினம் 16 ஆம் திகதி வரை மூன்று நாள்கள் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் ஒன்பது அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழாவின் போது 2 ஆயிரத்து 873 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் 46 தங்கப் பதக்கங்கள், 09 புலமைப் பரிசில்கள் மற்றும் 48 பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

பட்மளிப்பு விழா நிகழ்வுகளை பல்கலைக்கழகத்தின் யூரியூப் சனல் மற்றும் முகப்புத்தகம் ஆகிவற்றினூடாக நேரலையில் ஒளிபரப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், இணைக்கப்பட்டுள்ள கீயூ. ஆர் கோர்டை ஸ்கான் செய்வதனூடாக நேரலையில் இணைந்து கொள்ள முடியும் எனவும் துணைவேந்தர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

https://youtube.com/@uoj?si=30ZJWwU8pK_qN55N



# சுற்றுலாத் துறைமுகமாக காலியை மாற்றத் திட்டம்

காலி துறைமுகத்தை சுற்றுலா துறைமுகமாக மேம்படுத்துவதற்கான அபிப்பிராயங்கள் கோரப்பட்டுள்ளன.

துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்யவுள்ளோம் என துறை முகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செய லாளர் ருவன் சந்திர தெரிவித்துள் ளார்.

சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் மற்றும் படகுகள் வருகை தரும் வகையில் துறைமுகம் மேம்படுத்தப்படும் என்றும் தெரிவித் துள்ளார்.

# வெப்பத்திலிருந்து மாணவரை பாதுகாப்பதற்கு நடவடிக்கை

## கல்வி அமைச்சு அறிவுறுத்தல்



அதிக வெப்பத்திலிருந்து பாடசாலை மாணவர்களைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை நிர்வாகத்திற்கு கல்வி அமைச்சு மீண்டும் அறிவுறுத்தியுள் ளது.

வெளிப்புற செயற்பாடுகளில் ஈடுபடு வதை திட்டமிடுவது தொடர்பில் வழங்கப் பட்டுள்ள அறிவுறுத்தல்களை சில பாடசாலைகள் பின்பற்றவில்லை என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

அதிக வெப்பம் காரணமாக பாட சாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு கடந்த மாதம் 26 ஆம் திகதி கல்வி அமைச்சு பாட சாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியி ருந்தது.

அந்த அறிக்கையின் மூலம் வழங் கப்பட்ட அறிவுறுத்தல்களை அவ்வாறே பின்பற்றுமாறு கல்வி அமைச்சு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அதிக வெப்பம் நிலவும் நாள்களில் பாடசாலை மாணவர்கள் வெளிப்புற செயற்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும் எனவும் விளையாட்டுக்களில் ஈடுபடும் மாணவர்கள் போதியளவு நீர் பருகுவதற்கான அல்லது சோர்வைப் போக்குவதற்கான வழிவகைகளை செய்வது பொருத்தமானது எனவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

வெப்பம் நிலவும் நாள்களில் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சிகளைத் தவிர்க்குமாறு மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# மூன்று தனியார் பல்கலைக்கழகங்கள் மருத்துவபீடம் ஸ்தாபிக்க விண்ணப்பம்

மருத்துவ பீடங்களை ஸ்தாபிப்பதற்கு மூன்று தனியார் பல்கலைக்கழகங்கள் விண்ணப்பித்துள்ளன என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

Lyceum, NSBM, SLIIT ஆகிய 3 தனியார் பல்கலைக்கழகங்களே இதற்காக விண்ணப்பித்துள்ளன என கல்வி அமைச்சின் அரச சார்பற்ற உயர்கல்வி பிரிவு தெரிவித்துள்ளது.

இவற்றில் டுலஉநரஅ தனியார் பல்கலைக்கழகம் சமர்ப்பித்த விண் ணப்பம், இலங்கை மருத்துவ சபையின் முதற்கட்ட இணக்கப்பாட்டை பூர்த்தி செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், விண்ணப்பங்கள் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 14.03.2024




இன்று மனதில் தேவையற்ற கவலைகள் ஏற்படும். அதை விலக்கி நேர்மறை எண்ணங்களை கொள்வது உங்களுக்கு நல்லது.

இன்று உங்கள் வேலையில் தவறுகள் நேரலாம். கவனத்துடன் தவறு நேராமல் வேலை செய்வது உங்களுக்கு நல்லது.

உங்கள் மனதில் ஏற்படும் உணர்வுகளை உங்கள் துணையாருடன் பங்கு கொள்ள எண்ணுவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ள மனதை அமைதியாக வைத்திருங்கள்.

இன்று குறைந்த அளவு பண வரவே இருக்கும். பண இழப்புகள் ஏற்படலாம். ஏமாற்றங்களை சந்திக்க நேரலாம்.

இன்று நீங்கள் நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்க முடியாது. கால்வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் சகிப்புத் தன்மையுடன் இருக்க வேண்டும். சில அசௌகரியங்கள் காணப்படும். எதிலும் திட்டமிடல் அவசியம்.

உங்கள் பணிகளில் இன்று தவறுகள் நேரலாம். எனவே கவனமாக பணியாற்ற வேண்டும். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த திட்டமிட்டு வேலை செய்ய வேண்டியது அவசியம்.

உங்கள் துயரங்களை பகிர்ந்து கொள்வதால் உங்கள் துணையாரின் சலிப்புக்கு ஆளாவீர்கள். அனுசரித்து நடப்பதன் மூலம் சண்டைகளை தவிர்த்து மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம்.

அதிகரிக்கும் செலவுகளால் கவலை ஏற்படும். திட்டமிட்டு கவனமாக பணத்தை செலவு செய்ய வேண்டியது அவசியம்.

உங்களுக்கு சளித் தொல்லை ஏற்படலாம். குளுமையான பொருள்களை தவிர்க்க வேண்டும்.




இன்று நடப்பவை எல்லாம் உங்களுக்கு மகிழ்ச்சியையே தரும். இன்று நீங்கள் முக்கியமான முடிவுகளை எடுக்கலாம். தொலைக்காட்சி மற்றும் பாடல்கள் கேட்டல் போன்ற பொழுது போக்கு அம்சங்களால் மகிழ்ச்சி உண்டாகும்.

நீங்கள் இன்று உங்கள் பணிகளை திறமையுடன் செய்து முடிப்பீர்கள். இன்று உங்களுக்கு புதிய வேலைகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் இல்லறத் துணையை மகிழ்ச்சியில் ஆழ்த்துவீர்கள். அதனால் உங்களுக்கிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமையில் வளர்ச்சி காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்கள் நேர்மறை எண்ணங்கள் அதிகரிப்பதன் மூலம் உங்கள் ஆரோக்கியமும் மேம்படும்.




நீங்கள் இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். இன்று உங்கள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். தொலைதூரத்திலிருந்து நற்செய்திகள் வரும்.

பணி சம்பந்தமாக பயணங்கள் ஏற்படலாம். நீங்கள் பணிகளைச் செய்வதற்கு இன்று மிகவும் நல்ல நாள்.

நீங்கள் உங்கள் துணையாருடன் மிகவும் அன்பான முறையில் நடந்து கொள்வீர்கள். இது அவர் மீதான அன்பை மேலும் பெருக்கும்.

இன்று உங்களுக்கு தாராளமான பண வரவு இருக்கும். இன்று நீங்கள் சிறந்த வேலைக்கான ஊக்கத்தொகையை பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

நடப்பவற்றை இலேசாக எடுத்துக்கொண்டு உணர்ச்சி வசப்படாமல்இருக்க வேண்டும். அது உங்களின் சிறந்த ஆரோக்கியத்துக்கு வழி வகுக்கும்.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு அமைதியை பெற்றுத் தரும். இன்று நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நீங்கள் எதையும் எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணியின் வளர்ச்சி பற்றிய கவலை இருக்கும். வேலையில் தவறு நேராத வகையில் கவனம் செலுத்த வேண்டும்.

உங்கள் மனதில் வலுவான உணர்வுகள் ஏற்படும். அதன் காரணமாக உங்கள் துணையாருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படும்.

இன்று செலவுகள் அதிகரிக்கும். செலவுகளை சமாளிக்க கஷ்டப்படுவீர்கள். உங்கள் பணம் விரயமாகும்.

இன்று மன அழுத்தம் காரணமாக தலைவலி உபாதைக்கு ஆளாவீர்கள். அது உங்களுக்கு கவலை தரும்.




இன்று நீங்கள் பல தடைகளைக் கடந்த பிறகு உங்கள் செயல்களில் திருப்தி அடைவீர்கள். மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் போது கவனத்தை கையாளவும். கவலைகளை ஒதுக்கி மனதை அமைதியாக வைத்துக்கொள்ளுங்கள்.

உங்கள் பணி சம்பந்தமாக சில தடைகளை சந்திக்க நேரிடும். பணிச்சுமை அதிகமாக இருக்கும். நன்கு கவனம் செலுத்துங்கள். உங்கள் கடின உழைப்பை நம்புங்கள்.

உங்கள் வாழ்க்கைத்துணையைப் பற்றி பாதுகாப்பற்ற நிலையை உணர்வீர்கள். இது உங்களுடைய அன்புத் துணைவரிடம் அதிருப்தியை உருவாக்கும்.

இன்று அதிக அளவில் செலவுகள் ஏற்படும். உங்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டியிருக்கும்.




இன்று நீங்கள் சில அதிர்ஷ்டங்களை எதிர்பார்க்கலாம். நல்ல முடிவுகளை எடுப்பதற்கான சமமான மன நிலையைப்பெறுவீர்கள். இன்று உங்கள் வாழ்க்கைத் தரம் சிறந்த முறையில் இருப்பதற்கான சில கொள்கைகளையும் நோக்கங்களையும் ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணிகளை செவ்வனே செய்து நல்ல பலன்களைக் காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து நற்பெயர் கிடைக்கப் பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். அவரும் பதிலுக்கு உங்களுடன் இனிமையான வகையில் நடந்து கொள்வார். இதனால் நல்ல புரிந்துணரவ்பு காணப்படும்.




இன்று முன்னேற்றமான நிலையைக் காண்பீர்கள். குறைந்த முயற்சியில் பெரிய விஷயங்களை சாதிப்பீர்கள். நம்பிக்கை மற்றும் நேர்மறை எண்ணங்களுடன் இருப்பீர்கள்.

சில முக்கியமான சந்திப்புகளில் பங்கு பெறுவீர்கள். சந்திப்புகளின் பொழுது உங்கள் சக பணியாளர்களே ஆச்சரியப்படும் அளவிற்கு உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

நீங்கள் இன்று நட்பு முறையுடன் அணுகுவீர்கள். உங்கள் துணையாரும் அதை உணர்வார். அதனால் மகிழ்ச்சி நிலவும்.

நிதிநிலையைப் பொறுத்தவரை சாதகமான நிலை உள்ளது. சேமிக்க வேண்டும் என்ற உத்வேகம் அதிகரிக்கும். தேக ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். நல்ல திடமான ஆரோக்கியத்தை நீங்கள் பராமரிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.03.2024




இன்று உங்கள் மனதில் தேவையற்ற கவலைகள் காணப்படும். அவற்றை தவிர்த்து நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்வது உங்களுக்கு நல்லது.

இன்றுபணியிடச் சூழல் சற்று கடுமையாக இருக்கும். அதனால் பணிகளில் தவறுகள் நேரலாம். தவறுகள் நேராமல் இருக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். அதனை வெளிப்படுத்துவதன் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று உங்களுக்கு நிதி நிலையைப் பொறுத்தவரை அனுகூலமாக இல்லை. இன்று பயணத்தின் போது பண இழப்புகளால் ஏமாற்றங்களை சந்திப்பீர்கள். எனவே கவனமாக இருக்க வேண்டும்.




உங்கள் எண்ணங்களை சரியான வார்த்தை வடிவில் வெளிப்படுத்தாதன் காரணமாக இன்று நீங்கள் சில பிரச்சினைகளுக்கு ஆளாவீர்கள். இன்று நீங்கள் பொறுமை கடைபிடிப்பது மிகவும் அவசியம். மனதில் தோன்றும் தேவையற்ற கவலைகளை நீக்கி விடுங்கள்.

இன்று அதிகப் பணிகள் காணப்படுவதால் உங்கள் பணிகளில் தவறுகள் நேரலாம்.

மனதில் பல குழப்பங்கள் மற்றும் வெறுப்புணர்வு காணப்படும். அதனால் சந்தோஷமின்மை காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ள இயலாது.

இன்று உங்களுக்கு நிதி நிலையைப் பொறுத்தவரை அனுகூலமாக இல்லை. செலவுகள் அதிகமாக இருப்பதால் சேமிக்க இயலாது.




இன்று நீங்கள் சற்று மந்தமாக காணப்படுவீர்கள். இதனால் பல வாய்ப்புகளை நீங்கள் இழப்பீர்கள். எனவே இன்றைய நாளை நிர்வகிக்க திட்டமிடல் வேண்டும்.

பணியை குறித்த நேரத்தில் முடிப்பது கடினமாக இருக்கும். உங்கள் புத்திசாலிதனத்தை பயன்படுத்தி வெற்றி காண வேண்டும்.

நீங்கள் இன்று உணர்ச்சி வசப்பட்ட மன நிலையில் இருப்பீர்கள். உங்கள் பேச்சிலும் அது வெளிப்படும். எனவே அதை தவிர்த்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படலாம். உங்களிடம் இன்று பணம் இருந்தாலும் அதில் நீங்கள் திருப்தி அடையமாட்டீர்கள். அஜீரணக் கோளாறுகளால் நீங்கள் பாதிக்கப்படலாம். உணவில் கட்டுப்பாட்டுடன் இருங்கள். ஆரோக்கியமான உணவை உண்ணுங்கள்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகளைக் காண்பீர்கள். நீங்கள் வெற்றி பெறுவதற்கு சிறந்த திட்டமிடல் வேண்டும். அதிகம் உணர்ச்சி வசப்படாதீர்கள். அதிகமாகச் செயலாற்றுங்கள்.

உத்தியோகம் விஷயமாக நீங்கள் வெளிநாடு செல்ல வாய்ப்பு உள்ளது. அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் வாழ்க்கைத் துணையிடம் அக்கறையும் ஆர்வமும் காட்டுவீர்கள். வெளியிடங்களுக்குச் செல்வீர்கள்.

இன்று நிதிநிலையைப் பொறுத்தவரை அதிர்ஷ்டமான நாள். மிக விரைவாக இன்று நீங்கள் பணம் சம்பாதித்து அதன் மூலம் திருப்தியடையும் வாய்ப்பு உள்ளது.

இன்று திடமான ஆரோக்கியத்துடனும் நேர்மறை எண்ணங்களுடனும் காணப்படுவீர்கள். அதனால் திருப்தியும் உண்டாகும்.

